REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE :: 55630

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: மாசி 2உ திங்கள் (14—2—55) ★ ★ வெளியூர்: மாசி 3உ செவ்வாய் (15—2—55) [இதழ் 208

### கல்வி இலாகாவிற்கு வேலை தேடும் 'நிபுணர்கள்!'

போபாலில் கல்வி இலாகாவிற்குத் தேவையான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க நடைபெற்ற பேட்டியின்போது ஒருவர், 'சென்னை மாநிலத்தின் தலைநகரம்-வங்கம்' என்று பதிலளித்தாராம்! காலஞ்சென்ற ரபி அகமத் கித்வாய், 'உத்திரப் பிரதேசத்தின் முதலமைச்சர்' என்று ஒருவர் கூறினாராம்! 'அவர் இறந்துபோய் விட்டார்,' என்று அந்தப் 'புத்திசாலி'க்கு ஞாபகமூட்டியதும், அப்படியானால், 'ஜெயப்பிரகாஷ் நாராயணன் உத்திரப் பிரதேச முதலமைச்சர்' என்று குறிப்பிட்டாராம்!

பேட்டிக்கு வந்தவர்களில் பெரும்பான்மையினர் இண்டர் படித்தவர்களும், பட்டதாரிகளுமாவார்கள். 'இவர்களிடையே அறிவீனம் பரந்து காணப்படுகிறது' என்று போபால் கல்வி இலாகா செயலாளர் கூறினர்.

# கர்நாடகத்தில் கழக முழக்கம்!

## திராவிட இன எழுச்சிக் குரலுக்கு மகத்தான வரவேற்பு

## பெங்களூர் தி. மு. க. மாநாடுகள் பெற்ற பெரும் வெற்றி

### பல்லாயிரவர் திரண்டெழுந்த காட்சி; தாய்மார்கள் செவிமடுத்த மாட்சி!!

கண்டை நிகர் கன்னடமும், களி தெலுங்கும், கவின் மலையாளமும்—செந்தமிழின் உதிரத்தே உதித்தவை; அந்த நான்கு மொழி பேசுவோரும், மொழியால் தமிழராய், தெலுங்கராய், மலையாளிகளாய், கன்னடியராய் வாழ்கின்றனர்; இனத்தால் அவர்கள் அனைவரும் திராவிடர் என்ற வரலாற்று உண்மையை உரைத்து, 'வாழ்ந்து கெட்டுவிட்ட திராவிட இனம் இன்று மீண்டும் வாழத் துடிக்கிறது; நாம் வாழ—நம் நாடு நமதாக வேண்டும்; நம்மை நாமே ஆள்பவராக இருக்க வேண்டும்; திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்'—என்று நாம் திராவிடருக்கு இன எழுச்சியை ஊட்டிவருகிறோம்.

இந்த இன எழுச்சி, தமிழகத்தில் வெகு வேகமாக வளர்ந்து, 'இனத்தின் விடுதலையை பெற்றே தீருவோம்' என்ற உறுதி நிலைத்து உரம் பெற்று வருவது கண்கூடு; ஆனால், எக்காரணத்தாலோ, ஐயத்திற்கு வெகு அப்பாற்பட்ட, நியாயம் மிகுந்த திராவிடரின் இந்த உரிமைக் குரலை, விடுதலை வேட்கையை ஒப்புக்கொள்ள இன்று வரை மறுத்துவருபவர்கள், விறுகொண்டெழுந்துள்ள இன எழுச்சியை வீழ்த்திவிட கையாண்ட விவேகமற்ற தந்திரங்களில்—'திராவிடரென்று ஆந்திரர், கேரளர், கன்னடியார் ஆகியோரையும் தமிழருடன் சேர்த்துப் பேசுகிறீர்களே, உங்கள் குரலை கேரளத்தார் கேட்டதுண்டா? கன்னடியர் கருதியதுண்டா? ஆந்திரர் ஆதரித்ததுண்டா?'—என்று கேலியாக நம்மீது கேள்விக் கணைகளை தொடுத்ததும் ஒன்றாகும்.

அத்தகையோரின் 'கிண்டல்'களுக்கு திராவிடர்கள் அவ்வப்போது பதில் கூறி வந்திருக்கின்றனர்—கேரளத்திலே, ஆந்திரத்திலே எல்லாம்.

இப்போது, அந்தக் கேலிமொழி பேசியோருக்குச் சாட்டையடி தரும் வகையில், கன்னட மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில், திராவிட முன்னேற்றக் கழக மாநாடு பல்லாயிரவர் பங்குபெற—'லட்சம் பேர்' கையெழுத்திட்டு, 'மாநாடு நடக்க விடக்கூடாது'—என்று தடுப்பு முயற்சியில் ஈடுபட்ட அந்த மகத்தான எதிர்ப்புக்கிடையே—கன்னட மொழியிலேயே, 'திராவிட நாடு திராவிடருக்காக வேண்டும்' என்ற தீர்மானம், கன்னடத் தோழரான மு. க. வேந்தன் அவர்களின் விளக்க உரையுடன்—ஆரவாரப் பேரொலிக்கிடையே நிறைவேறி, மகத்தான வெற்றியுடன் கடந்த இரு நாட்களாக நடைபெற்றுள்ளது.

இருமுறை இந்த மாநாடு ஒத்திவைக்கப்பட்டது—கடந்த **1954** டிசம்பர் **18, 19**-ந் தேதிகளில் நடைபெறுவதாயிருந்து ஒத்திவைக்கப்பட்டு, பின்னர், **1955** ஜனவரி **1, 2**-ந் தேதிகளில் நடத்துவதாயிருந்து மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. இருமுறையும் நகரில் **144** தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது—வேறு பல காரணங்களுக்காக. மூன்றும் முறையாக இப்போது நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டு, துரிதமாக வேலைகள் துவங்கப்பெற்று நடைபெற்று வருவதைக் கண்டு, 'விட்டேனா பார், இந்த வீணர்களை; ஆண்டவனைப் பழிப்பர்; கடவுளை ஏசுவர்; மதத்தை மாசு படிந்ததென்பர்; திராவிடம் தனியாக வேண்டுமென்பர்; இந்தியாவைத் துண்டாட தூபமிடுவர்; பிரிவினை எண்ணத்தை ஊட்டுவர்; இந்திய ஒற்றுமையை (!) சீர்குலைப்பர் இந்தத் திராவிடர் இயக்கத்தவர், தங்கள் மாநாட்டில்; இக்கொடுமையைப் பொறுப்போமா? வாளாவிருப்போமா இது கண்டு?'—என்று சினம் கொண்டு, சீறி எழுந்து, 'மாநாட்டை தடை செய்க' என்று, மாநில முதல்வரிடம் காவடி எடுத்து, லட்சம் பேர் கையெழுத்துக் கொண்ட 'மகஜரைச் சமர்ப்பித்து' மண்டியிட்டனராம்—மகேசன் புகழ்பரப்பும் தெய்வநெறித் திருக்கழகத்தார் என்போர்!

இப்படி அடுக்கடுக்காகத் தடைகளும், எதிர்ப்புகளும் எழுந்தவண்ணமிருந்தும்—'எடுத்ததை விடுத்துவிட மாட்டோம்; முடித்தே தீருவோம்' என்று 'எதையும் தாங்கும் இதயம் பெறுக'—என்ற பொதுச் செயலாளரின் பொன்மொழிக்கு இலக்கணமாய் அமைந்த கர்நாடக தி. மு. கழகத் தோழர்கள் மாநாடுகளை நடத்தினர்.

★

கர்நாடக தி. மு. கழக மாநாடுகள் பெங்களூர் பிளாக் பள்ளி மைதானத்தில், இதுவரை கர்நாடகத்திலேயே அமைந்ததில்லை என்று அங்குள்ள பத்திரிகைகள் வர்ணிக்கிற அளவு மகத்தானதாக அமைந்திருந்த பிரம்மாண்டமான மஜீத் பந்தலில், கைலாசம் அரங்கில், 1955 பிப்ரவரித் திங்கள் 12, 13, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் சிறப்புற நடைபெற்றன.

மாநாட்டில், பல்லாயிரக் கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

மாநாட்டில், தமிழில் பேசப்படும் கருத்துக்களை முழுவதுமாகப் புரிந்துகொள்ள முடியாது அவ்வப்போது அருகில் உள்ளோரிடம் விளக்கம் பெற்றுக்கொண்டிருந்த கன்னட மக்களும் ஏராளமாக இடம் பெற்றிருந்தனர்.

தாய்மார்கள் காட்டிய ஆர்வம், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் உட்பட எல்லோரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

மாநாடு நடைபெற்ற இருநாட்களும் நகரெங்கும் மாநாட்டினைப் பற்றிய பேச்சுத்தான்.

மாநாட்டின் முகப்பில் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மறைந்த வீரன் அழகிரி ஆகியோரின் உருவப்படங்கள் இடம் பெற்றிருந்தன. வருவோருக்கெல்லாம், 'என் வாழ்வை இலட்சியத்திற்காக ஈந்தேன்; அந்த இலட்சியம் ஈடேறும்படி செய்வது உங்கள் பொறுப்பு' என்று அறிவுரை பகன்றது அழகிரியின் படம்!

"அவர் கனவை நனவாக்குவதே நம் கடமை; அந்தக் கடமை உணர்வும், கண்ணியமும், கட்டுப்பாடும் கொண்டு, ஆர்வமும் ஊக்கமும் பெற்று, விடுதலைப் பாதை நோக்கி வேகமாக வாரீர்"—என்று அன்பழைப்புத் தந்துகொண்டிருந்தது அண்ணாதுரை அவர்களின் உருவப்படம்.

வழக்கம்போல், நமது கழகத்தின் பாரம்பரியத்திற்கொப்ப எல்லா ஏற்பாடுகளும் சிறப்புற அமைந்திருந்தன. தொண்டர் படையினரின் அரும்பணி, குறிப்பிட்டுக் கூற வேண்டியதாகும்.

கர்நாடக மாநிலத்தின் சரித்திரத்திலேயே இத்தனை எதிர்ப்புகளுக்கு ஆளானதும் அதே நேரத்தில் மக்களின் அளவற்ற ஆதரவுடனும் வேறெந்த மாநாடும் நடைபெற்றதில்லை என்று பல பத்திரிகைகள் பாராட்டியிருந்தன என்றால், அம்மாநாட்டின் சிறப்பைப் பற்றி வேறென்ன கூற இருக்கிறது?

★

## சமூக சீர்திருத்த மாநாடு

கர்நாடக தி. மு. கழக முதல் சமூக சீர்திருத்த மாநாடு 12–2–55 சனியன்று காலை 10 மணி அளவில் துவங்கப்பெற்றது.

மாநாட்டுத் துவக்கத்தில் தோழர் சி. பி. சிற்றரசு மாநாடுகள் எத்தனை இடுக்கண்களுக்கிடையில் நடைபெறுகிறது என்பதை விளக்கிக் கூறினர்.

அடுத்து தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், வரவேற்புக் குழுவினரின் வேண்டுகோளின்படி, மாநாட்டினைத் திறந்து வைத்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்து சமூக சீர்திருத்த மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் எஸ். வி. பதி அவர்கள் எல்லோரையும் வரவேற்று உரை நிகழ்த்திவிட்டு, மாநாட்டிற்கு, வரவேற்புக் குழு தேர்ந்தெடுத்துள்ள தோழர் காஞ்சி கல்யாணசுந்தரனார் அவர்களைத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கேட்டுக் கொண்டார்.

அதனை வழிமொழிந்து தோழர்கள் அ. பொன்னம்பலனார், என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் தோழர் கல்யாணசுந்தரனார் அவர்களின் 25 ஆண்டு கால சுயமரியாதை இயக்கத் தொண்டு குறித்தும், அவர் மாநாட்டிற்குத் தலைமை தாங்குவது கர்நாடகப் பகுதிக்கு சிறப்புமிகுந்ததாகும் என்றும் எடுத்துக் கூறினர்

பின் மாநாட்டுத் தலைவர். தோழர் காஞ்சி-கல்யாணசுந்தரனார் அவர்கள் சமூக சீர்திருத்த மாநாட்டின் நோக்கம் குறித்தும் தி. மு. கழகம் சமுதாயத்தைப் பற்றிக்கொண்டுள்ள கருத்துக்கள் குறித்தும் விளக்கி மாநாட்டுத் தலைமையுரையினை சிறப்பாக ஆற்றினார்கள்.

அத்துடன் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

### மாலை நிகழ்ச்சிகள்

மாலை நிகழ்ச்சிகள் இடைவேளைக்குப் பிறகு 3-30 மணி அளவில் துவங்கின.

தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் "போராட்டம்" எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

தொடர்ந்து தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் 'பேய், பூதம், பிசாசு' எனும் தலைப்பில் நீண்டதோர் விளக்க உரை தந்தார்.

அடுத்து தமிழாசிரியர் வெங்கடாசலனார் சிறிது நேரம் பேசியதும், தோழர் மதியழகன் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

பின்னர் தோழர் அன்பழகன் அவர்கள், 'கலையும் வாழ்வும்' என்பது குறித்து சொற்பெருக்காற்றினார்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள்இறுதியாக சிறப்புரை நிகழ்த்தினார்.

அத்துடன் சமூக சீர்திருத்த மாநாடு இரவு 8-45 மணிக்கு முடிவுற்றது.

★

## அரசியல் மாநாடு

13—2—55 அன்று காலை 10 மணியளவில் அரசியல் மாநாடு துவங்கப்பெற்றது.

தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் மாநாட்டினைத் துவக்கி வைத்து வீர உரை நிகழ்த்தினர்.

அடுத்து, மாநாட்டுத் தலைவர் என். வி. நடராசன் அவர்கள், இதர கழக முன்னணி வீரர்கள் சுற்றிலுமிருக்க, தொண்டர்கள் அணிவகுப்பு வணக்கம் செலுத்த, கழகத்தின் இருவண்ணக் கொடியினை ஆரவாரப் பேரொலிக்கிடையேயும், 'வாழ்க வாழ்கவே—வளமார் எமது திராவிடம்' என்ற பண் இசைக்கிடையேயும் மாநாட்டு முகப்பிலிருந்த மணிக்கம்பத்தில் ஏற்றிவைத்தார்.

பின்னர், வரவேற்புக் குழுத் தலைவர் எஸ். ஜே. உசேன் அனைவரையும் வரவேற்று, தோழர் என். வி. நடராசன் அவர்களை மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு முன்மொழிந்து உரை நிகழ்த்தினர்.

தலைவரை வழிமொழிந்து தோழர்கள் மதியழகன், அன்பழகன், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினார்கள்.

தலைவர் என். வி. நடராசன் அவர்கள் தலைமை ஏற்று, தி. மு. கழகத்தின் இலட்சியத்தைத் திறம்பட விளக்கி சீரியதோர் சொற்பெருக்காற்றினார்கள்.

அத்துடன் மாநாட்டின் காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

### மாலை நிகழ்ச்சிகள்

மீண்டும் மாலை நிகழ்ச்சிகள் 3-30 மணிக்குத் துவங்கின.

துவக்கத்தில் காஞ்சி தோழர் கா. வே. முருகேசன் கழகப் பண்கள் பல இசைத்தார்.

தோழர் முகவை-ஆர். எஸ். பாண்டியன் தி. மு. கழக இலட்சியம் குறித்துப் பேசினார்.

அடுத்து, தோழர் குப்பன்—தோழியர் ருக்மணி திருமணம் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்களால் மாநாட்டு மேடையிலேயே நடத்தி வைக்கப்பட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

சென்னை 14—2—1955 திங்கள்

# அவநம்பிக்கை கூடாது!

சேலத்தில் கிடைக்கும் இரும்பைப் பயன்படுத்தி அங்கே ஒரு இரும்புத் தொழிற்சாலை அமைக்கும் பிரச்சினை பற்றி இந்திய சர்க்கார் போதிய கவனம் செலுத்துகிறார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இந்திய சர்க்கார் திட்ட இலாகா அமைச்சர் ஜி. எல். நந்தா தெரிவித்திருக்கிறாராம்.

சென்னை மாநிலத்தில் எஃகுத் தொழிற்சாலை ஒன்று அமைப்பது பற்றிய பிரச்சினை இந்திய சர்க்காரின் கவனத்தில் இருக்கிறதென்றும், ஆனால் நெய்வேலியில் நிலக்கரிச் சுரங்கம் வெற்றிகரமாக நடைபெறும் என்ற முடிவு தெரிந்த பின்னர்தான் இது பற்றிய ஆரம்ப வேலைகளையே துவக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறாராம்.

பெங்களூரில் பேசிய இந்திய சர்க்கார் உற்பத்தி இலாகா அமைச்சர் கே. சி. ரெட்டி தென் இந்தியாவில் ஒரு லட்சம் டன் அளவில் எஃகுத் தயார் செய்யும் எஃகுத் தொழிற்சாலை ஒன்றை பரீட்சார்த்தத் திட்டமாக ஆரம்பிக்க இந்திய சர்க்கார் யோசனை செய்து வருவதாகக் கூறியுள்ளார்.

எஃகுத் தயாரிப்புகளுக்கு நெய்வேலியில் கிடைக்கும் நிலக்கரி பயன்படுமா என்பதை ஆராயவே இந்த ஏற்பாடாம்.

கே. சி. ரெட்டி அவர்கள் கூறுகிற பரீட்சார்த்த எஃகுத் தொழிற்சாலை, சேலத்தில் அமைக்கப்படும் என்று கூறுவதற்கில்லை. ஒரு வேளை அவர் தன் மனதில், மைசூரைச் சேர்ந்த சாந்தூரில் கிடைக்கும் இரும்பை நினைத்துச் சொல்கிறாரா என்பதும் விளங்கவில்லை.

ஆனால், அமைச்சர்களான நந்தாவும், கே. சி. ரெட்டியும் நெய்வேலியின் உன்னதமான எதிர்காலத்தைப் பொறுத்துத்தான் இத்திட்டங்கள் அமையும் என்று குறிப்பிடுகிறார்கள்.

அதாவது, நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் இலாபகரமாக வெற்றியடையுமா என்ற வீண் சந்தேகம் இந்திய சர்க்காருக்கு இருப்பதுபோல் காணப்படுகிறது. எத்தனையோ நிபுணர்கள் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தின் வெற்றிக்கு உறுதியளித்தும், இவர்கள் நம்பிக்கை கொள்ளவில்லை என்றால், இது வேண்டுமென்றே கொள்ளும் அவநம்பிக்கைதான் என்று கருத இடமுண்டு.

நெய்வேலி நிலக்கரி நல்ல பயன் அளித்தால் இதன் மூலம் மின்சார உற்பத்திக்கு நல்ல வாய்ப்பு ஏற்படுமென்றும், தர்ம நிலையங்களில் சாதாரண கரிக்குப் பதில் லிக்னைட் பயன் படுத்தலாம் என்றும், அதன் பயனாய் காடுகளின் நிலைமை சீர்படும் என்றும் அமைச்சர் கே. சி. ரெட்டி கூறியிருக்கிறார். அத்துடன், உர உற்பத்தித் தொழில் ஒன்று இங்கே ஆரம்பிக்கப்படலாம் என்றும் அவர் கூறி, நெய்வேலி நிலக்கரித் திட்டம் நல்ல பயன் அளித்தால் அதன் மூலம் தென் இந்தியாவின் எதிர்காலத்தில் நல்ல மாறுதல் ஏற்படும் என்றும் குறிப்பிடுகிறார்.

இவ்வளவையும் அறிந்து கொண்டிருப்பவர்கள், திட்டம் வெற்றி பெறுவது பற்றி அவநம்பிக்கை கொள்ளுகிறார்கள் என்றால், அந்த எண்ணத்தில் ஏதேனும் உண்மையிருக்குமா?

மனமிருந்தால் — தென்னாடு வாழ வேண்டுமென்ற நல்ல எண்ணம் இருந்தால் நம்பிக்கை ஏற்படும்.

நெய்வேலித் திட்டம் வெற்றி பெறுகிறதா என்கிற நம்பிக்கை இந்திய சர்க்காருக்கு ஏற்படு முன்னர் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை தயார் செய்துவிடுவார்கள்; பின்பு, 'மூன்றாவது திட்டத்தில் சேலத்திலுள்ள இரும்பைப் பற்றிப் பேசலாம்,' என்று வடநாட்டு சர்க்கார் கூறிவிடும்.

மத்தியப் பிரதேசத்தில், இரும்புத் தொழிற்சாலை ஒன்றை உருவாக்க இப்போது தான் ரஷ்ய நிபுணர்களுடன் ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது; அடுத்தபடியாக மத்திய பிரதேசத்தில் கோர்ப் என்னுமிடத்தில் கிடைக்கும் நிலக்கரியைத் தோண்டி எடுக்க நல்ல திட்டம் ஒன்றை டில்லி சர்க்கார் யோசிக்கிறதாம். இச்செய்தியை, பெங்களூரில் பேசிய கே. சி. ரெட்டி அவர்கள் கூறியிருக்கிறார்.

வடக்கே என்றால், அடுத்து அடுத்து திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன; தெற்கே ஒரே ஒரு திட்டம் என்றால், அதன் மீது அவநம்பிக்கை கொள்ளுவதாகக் கூறி, தென்னாட்டில் இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்காவது புதிய தொழில் ஏதும் ஆரம்பிக்காது வஞ்சகம்புரிய வடவர் ஏற்பாடுகள் செய்கின்றனர். இச்சமயத்தில்தான் சென்னை சர்க்கார் விழிப்புடன் இருக்க வேண்டும்.

நெய்வேலித் திட்டம் வெற்றி பெறுமா என்று யோசிக்காமல், வெற்றிபெறும் என்ற துணிவுடனேயே திட்டமிட வேண்டும்.

சேலம் மாவட்டத்தில் ஏராளமான இரும்பு கிடைக்கிறது; பாக்சைட் என்று அழைக்கப்படும் அலுமினியம் கிடைக்கிறது; மைக்கா என்னும் உலோகம் கிடைக்கிறது. நெய்வேலி நிலக்கரித் திட்டம் வெற்றிபெறுவதினால் சேலத்தில் தொழிற்சாலைகள் அமைக்க இச்சாதனங்கள் எல்லாம் நன்கு பயன்படும்.

நெய்வேலியில் மின்சாரம் உற்பத்தி செய்ய தர்மல் நிலையங்கள் அமைத்தால் அதன் மூலம் குறைந்த செலவில் மின்சாரம் கிடைக்கும். அப்படி கிடைக்கும் மின்சாரத்தையோ அல்லது மேட்டூரில் உற்பத்தியாகும் மின்சாரத்தையோ பயன்படுத்தி சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலை ஒன்று அமைக்க முடியும்.

நெய்வேலியில் தார் உற்பத்தி செய்யவும், சாயங்கள் தயார் செய்யவும் தொழிற்சாலைகள் அமைக்கலாம்.

சென்னை சர்க்கார் இது போன்ற திட்டங்களையெல்லாம் கருத்தில் கொண்டு இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலத்து இரும்பை மையமாக வைத்து, 'பல அம்ச திட்டம்' ஒன்றைச் சேர்க்க வடவரை வற்புறுத்தவேண்டும்.

'நெய்வேலி நிலக்கரி சுரங்கத்தின் வெற்றியைப் பார்த்த பின்னர்தான் இவை பற்றி யோசிக்க முடியும்,' என்ற டில்லியின் கருத்தை சென்னை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவே கூடாது.

நெய்வேலியின் எதிர்காலம் ஆறு மாதத்தில் தெரிந்துவிடும் என்பது இந்திய சர்க்காரின் அலட்சிய மனப்பான்மையைத்தான் காட்டுகிறது; அதன் கருத்து ஒப்புக்கொள்ள இயலாத ஒன்றாகும்.

"வெளி நாடுகளிலிருந்து போதிய இயந்திரங்கள் வரவில்லை; ஆகவே, கால தாமதம் ஆகிவிட்டது; சேலத்து இரும்பு பற்றிய பிரச்சினையை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் தீட்டும்போது யோசிக்கலாம்" என்று இந்திய சர்க்கார் கூறிவிட நேரிடும் என்பதை சென்னை சர்க்கார் உணர வேண்டும்.

சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே வசதிகள் செய்யப்பட வேண்டும்; மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கு திட்டம் தீட்டலாம் என்ற எண்ணம் எழுவது—சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு 15 ஆண்டுகளாவது செல்லும் என்பதைத்தான் குறிக்கும். இதை சென்னை சர்க்கார் நன்கு உணரவேண்டும்.

இதற்கிடையில், நெய்வேலி நிலக்கரியை வெட்டி எடுத்து, வடக்கே கொண்டுபோய் வடநாட்டின் நலனுக்கான பல திட்டங்களில் அதைப் பயன்படுத்திக்கொள்ள டில்லி முயலலாம் என்பதையும் சென்னை சர்க்கார் நினைவில் கொள்ள வேண்டும்.

நெருக்கடியான இந்த நேரத்தில், சென்னை ஆட்சி பீடத்திலிருப்போர் தமிழ் நாட்டின் தொழில் வளத்தை உயர்த்த உறுதியுடன் இருக்கவேண்டும்; இல்லையேல், தென்னாட்டின் வாழ்வை பல ஆண்டுகளுக்குப் பின் தள்ளிய நிலைமைக்கு அவர்கள் பொறுப்பாளிகளாவார்கள்.

ஆகவே, நெய்வேலி நிலக்கரி தென்னாட்டுக்குப் பயன்படாமல், அச்செல்வம், வடவரின் வாழ்வை உயர்த்த பயன்படும் நிலைமை உண்டாவதைத் தடுக்க சென்னை சர்க்கார் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

---

### நிலக்கரியிலிருந்து செயற்கை எண்ணெய்?

நிலக்கரியிலிருந்து செயற்கை எண்ணெயை உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையின் திட்டங்களைத் தெரிவிக்குமாறு அயல் நாட்டுக் கம்பெனிகளை கேட்டுக் கொள்ளப்போவதாக இந்திய சர்க்கார் உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி தெரிவித்தார்.

---

ஆண்டுதோறும் சுமார் 7,840-டன் பூச்சி ஒழிப்பு மருந்துகள் சர்க்கார் உபயோகத்துக்குத் தேவையாயிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

---

# பெரியாறு மின்சாரத் திட்டம்: — மதுரை மாவட்டம் வளம்பெறும்

## விவசாயமும் தொழில்களும் பெருகும்

சுமார் ரூ. 10½ கோடி செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் பெரியாறு நீர்விசை மின்சாரத் திட்டத்தை சென்னை முதலமைச்சர் காமராசர் 11-ந் தேதியன்று துவக்கிவைத்தார். மதுரை மாவட்டம் தேனியிலிருந்து 34-வது மைலில் கூடலூர், குமிலி ஆகிய ஊர்களுக்கிடையே — கம்பத்திலிருந்து தேக்காடி செல்லும் பிரதான பாதையிலிருக்கும் குன்றுப் பகுதியின் கீழ் முகாமில்—மதுரையிலிருந்து சுமார் 80 மைல் தூரத்தில் இது அமைந்துள்ளது.

பெரியாறு மின்சாரத் திட்டம், சென்னை மாநிலத்தில் அமைக்கப்படும் ஐந்தாவது நீர்விசைத் திட்டமாகும். மற்ற நான்கு திட்டங்களாவன :— பைகாரா; மேட்டூர்; பாபநாசம்; மோயார் திட்டங்கள்.

நான்காண்டு காலத்தில் பூர்த்தியாகுமென எதிர்பார்க்கப்படும் பெரியாறு மின்சாரத் திட்டம் நிறைவேற்றப்படுவதால், மதுரை மாவட்ட மக்களுக்கு வேலை வசதியும், மாநிலம் முழுவதிலும் தொழில் வளர்ச்சிக்கு வசதியும் ஏற்படும். சுற்றுப்புறங்களில் சிறிய தொழில்களும், பெரிய தொழில்களும் ஏற்பட முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நீர்ப்பாசனத்திற்கும், விவசாயத்திற்கும், மற்றுமுள்ள பலவகைகளுக்கும் மின்சார சக்தி பயன்படும்.

வைகை நீர்த்தேக்கத் திட்டமும் பெரியாறு மின்சாரத் திட்டமும் முடிவடைந்தபின், மதுரை மாவட்டம், சென்னை மாநிலத்தின் வளமிகுந்த இடங்களில் ஒன்றாகும் என்பதில் சந்தேகமில்லை.

சென்னை—திருவாங்கூர் எல்லையிலுள்ள 'கல்லிமலை' எனும் மலையின் உச்சியில் பெரியாறு ஆரம்பித்து, அடர்ந்த மலைகளினூடே பாய்ந்து 16 மைல் தூரம் வட திசையில் சென்று, பின்னர், தாளைக்குடி எனும் இடத்திற்கு அருகில் நேர் மேல் திசையாகத் திரும்பி மேலும் 8 மைல் தூரம் ஓடுகிறது.

இந்தப் பெரியாற்றின் குறுக்கே கட்டப்படும் அணையின் உயரம் 153 அடி ஆகும். அணையின் முழு நீர்த்தேக்கமும் 10·21 சதுர மைல் மேல்பரப்பையும், 152 அடி ஆழத்தையும் கொண்டதாகும். முழு நீர்த்தேக்கத்தின் அளவு மொத்தம் 1566·2 கோடி கன அடிகளாகும்.

இந்த அணைத்திட்டத்தை ஒட்டி, ஏற்கனவே நீர்ப்பாசன இலாகாவினரால் குடையப்பட்டுள்ள சுரங்கத்தின் நீளம் 5887 அடியும், 96 சதுர அடி அகலமும் கொண்டதாகும். சுரங்கத்தின் இறுதி வெளியில் ஏற்படுத்தப்படும் ஏரியில் தான் மேற்கண்ட சுரங்கத்தின் (டன்னல்) வழியாக அனுப்பப்படும் தண்ணீர் தேங்கும். அந்த ஏரியின் அளவு 30 லட்சம் கன அடியும், கட்டப்படும் அணையின் உயரம் 93 அடியுமாகும்.

இந்த ஏரியிலிருந்து மறுபடியும், 4183 அடி நீளமும், 150 சதுர அடி அகலமும் கொண்ட சுரங்கத்தின் வழியாக அத்தண்ணீர், விநாடிக்கு 1600 கன அடி வீதம் சென்று 40 அடி விட்டமுள்ள 'சர்ஜ் டாங்கை' அடையும்.

இத்திட்டம், 240 மைல் நீளமுள்ள மின்சாரக் கம்பித் தொடர்புகளால் நிறுவப்பட்டு மற்ற திட்டங்களுடன் இணைக்கப்படும்.

பெரியாறு மின்சாரத் திட்டம் முடிவானதும், கிராமங்களுக்கு மின்சார வசதி அதிகரிக்கும். தற்போது சென்னை மாநிலத்தில் 2200 கிராமங்களில் மின்சாரவசதி செய்யப்பட்டுள்ளது. நீர் விசை மின்சார சக்தி உற்பத்தியில் சென்னை பம்பாய்க்கு அடுத்தபடியாக இரண்டாது இடத்திலிருக்கிறது.

சென்னை மாநிலத்தில் இனி மின்சார உற்பத்தியை விரிவாக்குவதற்குப் புதிய நீர் வசதிகள் வேறு கிடையாது. பெரியாறு மின்சாரத் திட்டத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் மின்சார சக்தியை இப்போதுள்ள மின்சார திட்ட ஏற்பாட்டில் இணைப்பதற்குப் பூர்வாங்கமான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

---

# திபேத்தின் விவசாய வளம் அதிகரிக்கிறது

## சீன நிபுணர்களின் பெருமுயற்சி

மக்கள் சீனாவிலிருந்து அனுப்பப்பட்ட விவசாய பட்டதாரிகளான பலர், திபேத் மண்ணை பக்குவப்படுத்தி, திபேத்தின் விவசாய வளத்தை அதிகரிக்க முயற்சிக்கிறார்களாம்.

குளிர் காலத்தில் திபேத்தில் கோதுமை பயிரிடும் பழக்கம் இல்லையாம்; இப்போது சீனர்களால் லாஷா, கயான்டசி, ஷிசேட்சி ஆகிய இடங்களில் நடத்தும் பண்ணைகளில் 300 விதமான பயிர்களை வளர்க்க பரீட்சிக்கப்படுகிறதாம். குளிர் காலத்தில் கோதுமை பயிரிடவும் அப்பண்ணைகளில் பரீட்சிக்கப்படுகிறதாம்.

திபேத் விவசாயிகளுக்கு இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தும் முறைகள் சொல்லித்தரப்படுகின்றன.

திபேத்தின் தலைநகரில் அண்மையில் நடைபெற்ற விவசாயக் கண்காட்சி ஒன்றில் மாதிரிப் பண்ணைகளில் தயாரான தானியங்கள், காய்கறிகள் வைக்கப்பட்டிருந்தனவாம்; அவற்றைக் கண்ட திபேத் மக்கள் வியப்படைந்தார்களாம்.

மங்கோலியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட புற்களை வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவாம்.

திபேத்தில் கால்நடைகள் அடிக்கடி மரணத்திற்கு உள்ளாகும் இடமான ரின்டஞ்ச்பெஸ்ட் என்னுமிடத்தில் சீனாவிலிருந்து வந்துள்ள கால்நடை நிபுணர்கள் சிறந்த கால்நடைப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்கிறார்களாம்.

---

# கிராம ஊழியர்களுக்கு விவசாயப் பயிற்சி

புதுடில்லி, பிப். 7—

சமுதாய நலத் திட்டங்களை அமுல் நடத்த ஆரம்பித்தபோது, பயிற்சி வசதிகள் போதிய அளவில் இல்லாதிருந்ததால், அத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகவும் வட்டார அபிவிருத்திக்காகவும் நியமிக்கப்பட்ட கிராம ஊழியர்களில் பலர், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த குறைந்தபட்ச பயிற்சி காலமாகிய ஒருஆண்டு காலத்துக்கு விவசாயத்துறையில் ஆதாரப் பயிற்சிபெற முடியாமல் போய்விட்டது. தற்போது, பயிற்சி வசதிகள் தாராளமாகக் கிடைப்பதால் பல்வேறு மாநிலங்களிலும் நியமிக்கப்பட்டுள்ள கிராம ஊழியர்களுக்கு, அவர்களைக் குழு குழுவாகப் பிரித்து, வேண்டிய பயிற்சியை அளிக்க, சமுதாய நல நிர்வாக நிறுவனம் உத்தேசித்திருக்கிறது.

# சென்னை சட்டசபையில்....

### நெய்வேலித் திட்டம்

நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்ட வேலைகளுக்கு இயந்திரங்களுக்கான செலவு இதுவரை ரூ. 6·39 லட்சம் என்றும், இன்னும் மேற்கொண்டு எவ்வளவு செலவில் இயந்திரங்கள் வாங்க வேண்டுமென்பது இனிமேல் இறுதி முறையாகத் தீர்மானிக்கப்படும் திட்டத்தின் அமைப்பைப் பொறுத்துத்தான் தெரியும் என்றும், தோழர் ஏ. இரத்தினம் எம் எல். ஏ.-யின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் தெரிவித்தார்.

பொருள் சிக்கனத்தையும், அபாயமின்மை ஆகியவைகளையும் யோசித்தே தேவையான ஆட்கள் மட்டும் வேலைக்கு வைத்துக்கொள்ளப்பட்டனர் என்றும் சுரங்கம் வெட்டும் தொழிலில் மனித உழைப்புக்கும் மிஞ்சிய சக்தி தேவைப்பட்டதால் இயந்திர சக்தி உபயோகிக்கப்பட்டதென்றும், அப்படி இருந்தும் சுமார் 400 ,தொழிலாளர்கள் இவ்வேலையில் அமர்த்தப்பட்டிருந்தனர் என்றும் கூறினர்.

மேலும் அவர், பாட்டாளி மக்களின் நலனில் மற்றையோரைக் காட்டிலும் சர்க்காருக்கு அதிக அக்கரை உண்டென்றும், மத்திய, மாநில, அந்நிய சர்க்கார் அனைவரின் உதவியுடனும்தான் இந்த இயந்திரச் சாதனங்களெல்லாம் வாங்கப்பட்டன என்றும் கூறினர்.

வேலையில்லாமல் தவிக்கும் பலருக்கும் வேலை கிடைக்கச் செய்யும் வகையில் பெரியதோர் திட்டமாகத்தான் நெய்வேலித் திட்டம் பயன்படுத்தப்பட இருக்கிறது என்றும் அவர் கூறினர்.

தோழர் எம். கல்யாணசுந்தரம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் அமைச்சர், பிரிட்டன் நிபுணர்கள் சமர்ப்பித்த அறிக்கை சர்க்காரின் பரிசீலனையிலிருந்து வருகிறது என்றும், பரீட்சார்த்தத் திட்டம் முடிவடைந்த பிறகுதான் எல்லாவற்றையும் பரிசீலனை செய்து அவற்றில் ஏதாவது ஒன்று சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்படுமென்றும், அதுவும் இறுதி முடிவு எடுக்கப்பட்ட பின்னர்தான் அமுல் நடத்தப்படுமென்றும் தெரிவித்தார். மேலும் அவர், நெய்வேலி சுரங்கத்தில் இன்னும் 25 அடி கீழே வெட்டினால்தான் நிலக்கரிப் படுகையைக் காண முடியுமென்றும், அவ்வளவு தூரம் தோண்டுவதற்குத் தேவையான 'டிரில்' இயந்திரங்கள் இல்லாமலிருப்பதால், வெளி நாடுகளிலிருந்து அவைகளைப் பெறுவதற்கான 'டெண்டர்'கள் கோரப்பட்டுள்ளனவென்றும், வருகின்ற 'டெண்டர்' மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு முடிவெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், கைவேலை செய்பவர்களின் நலனும் பாதிக்கப்படாமல், அதே நேரத்தில் மிகமிகத் தேவையானபோது இயந்திரத்தை உபயோகிப்பதுமே சர்க்காரின் கொள்கை என்றும் குறிப்பிட்டார்.

★

### கண் திறந்து விட்டதே!

சென்னை நகர நடைபாதைகளிலும், சாலையோரங்களிலும் குடியிருக்கும் வீடற்றோருக்கு, தங்கியிருப்பதற்கான வீட்டு வசதி செய்து கொடுக்க சர்க்கார் உத்தேசித்துள்ளனரென்றும், இப்படி வசிப்பவர்கள் 20,746 நபர்களைக் கொண்ட 6,492 குடும்பங்களென்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறதென்றும் சுகாதார மந்திரி ஏ. பி. ஷெட்டி அறிவித்தார்.

பிளாட்பாரம் வாசிகளான சுமார் 15 ஆயிரம் பேருக்கு வசதி செய்து தர சென்னை நகர சபை ஒரு திட்டம் வகுத்துள்ளதென்றும், இதற்கு 840 ஏகர் நிலத்தை ஆர்ஜிதம் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும், மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

### எதிர்ப்பும்—மறுப்பும்

ஜப்பானிய கம்பெனி ஒன்றுக்கு 'பைலட்' பவுண்டன் பேனா உற்பத்திச்சாலை ஒன்றும், டெய்லர் கம்பெனி ஒன்றுக்கு 'குவிங்க்' என்ற பேனா மை தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் சென்னையில் நிறுவ இந்திய சர்க்கார் அனுமதியளிப்பது பற்றி எழுந்த சில கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், அமைச்சர், இம்மாதிரி தயாரிப்புத் தொழிற்சாலைகளை அமைப்பதால் உள்நாட்டு உற்பத்தியைப் பாதிக்கும், என்று உள்நாட்டு உற்பத்தியாளர் தெரிவித்திருந்த ஆட்சேபம் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டதென்றும், 'பார்க்கர்' பேனாவுக்குத் தேவையான மை இந்தியாவில் தயாரிக்கப்படாததால் அத்தொழிற்சாலையை நிறுவலாம் என்று மத்திய சர்க்கார் பதிலளித்துள்ளதென்றும், மேலும் 'குவிங்க்'யின் விலையைப் பார்க்கும்போது, அது, உள்நாட்டு மைகளோடு போட்டியிடுவதாகத் தெரியவில்லை என்றும் பதிலளித்தார்.

★

### சாத்தியமில்லை!

தேசிய மாணவர் படையில் (என். சி. சி.) அளிக்கப்படும் பயிற்சி முக்கியமாக இருப்பதைக் கவனித்து அதை எல்லா மாணவர்களுக்கும் கட்டாயமாக்குவதை சர்க்கார் கவனிக்கும் என்பது சாத்தியமில்லை என்றும், ஆனாலும், சாத்தியமான அளவுக்கு அது விரிவாக்கப்பட்டு வருகிறது என்றும் அமைச்சர் சுப்பிரமணியம், கேள்வியொன்றிறுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

1953—54ல் ரூ. 5,51,170-ம். 1954 — அக். 30 வரை ரூ, 2,25,630-ம், இப்படையைச் சேர்ந்த 'சீனியர் டிவிஷனு'க்கும், அதுபோலவே, 'ஜூனியர் டிவிஷனு'க்கும் முறையே ரூ. 3,47,659 - ம், ரூ. 96,580-ம் செலவாகியிருக்கிறதென்றும் கூறினர்.

★

### 'கொள்கை' விளக்கம்

பயிற்சி பெருத கீழ்த்தர ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களின் தொகை என்ன என்பது பற்றிய தகவல் எதுவும் கிடையாதென்றும், அந்த தொகை மிகவும் குறைவாகவே இருக்குமென்று தாம் கருதுவதாகவும் அமைச்சர் சுப்பிரமணியம் கூறினர்.

இந்த கீழ்த்தர ஆரம்ப ஆசிரியர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூ. 11-ம், பஞ்சப்படி ரூ. 18-ம் கொடுக்கப்பட்டு வருகிறதென்றும், ஏற்கனவே ஆசிரியர்களுக்கென சர்க்கார் அனுமதித்துள்ள ரூ. 2, ரூ. 3 சம்பள உயர்வு, இத்தர ஆசிரியர்களுக்குக் கிடையாதென்றும், பயிற்சி பெற்ற உயர்தர எலிமெண்டரி, காலேஜ் கிரேட் ஆசிரியர்களுக்குத்தான் அந்தச் சம்பள உயர்வு தரப்படுமென்றும் அவர் கூறினர்.

மேலும் அவர் பதிலளிக்கையில், இந்தத் தரத்தைச் சேர்ந்த ஆசிரியர்களெல்லாரும் போதிய பயிற்சி, தகுதியற்றவர்களென்றும், இவர்களை ஆதரிக்க சர்க்கார் விரும்பவில்லை என்றும், இவர்கள் விரைவிலேயே பதவியிலிருந்து விலகிவிட வேண்டுமென்றும் கூறினர்

★

### கைத்தறி நிதி உதவி

கைத்தறி துணி விற்பனை 'ரிபேட்'டாக 1953—54ல் ரூ. 1,23,951-ம், பங்கு மூலதனக் கடனாக ரூ. 1,02,731-ம் கைத்தறி 'செஸ்' நிதியிலிருந்து வழங்கப்பட்டதாகவும், 1953—54ல், இந்த நிதியிலிருந்து மொத்தம் 331 - சொசைட்டிகள் மானிய உதவி பெற்றன என்றும், 1954 மார்ச்சு மாதம் 31-ந் தேதிவரை மொத்தம் 5,669 நெசவாளிகள் இப்புது திட்டத்தின் கீழ் கூட்டுறவு சொசைட்டிகளில் சேர்ந்தனர் என்றும் அமைச்சர், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

## தென்னாட்டில் கைத்தொழில் வளம்

"பழுப்பு நிலக்கரி பரீட்சார்த்தத் திட்டம் முடிந்ததும் முழு அளவு சுரங்க வேலையும் எடுத்துக் கொள்ளப்படும்; இம்முழு அளவு திட்டம் இறுதியாக முடிவுற்றதும், அதற்கு நிதி உதவும் பொறுப்பை மத்திய சர்க்காரே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இத்திட்டம் மட்டும் தடங்கல்களேதுவும் இல்லாமல் நிறைவேறிவிட்டால் தென்னாட்டின் கைத்தொழில் வளம் 'பிரம்மாண்டமான' அளவு பெருகி விடுவதற்கான வாய்ப்பு இருக்கிறது."

இவ்வாறு, இந்திய சர்க்கார் உற்பத்தி அமைச்சர் கே. சி. ரெட்டி, நிருபர்களிடையே பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும், அவர், வெற்றிகரமான உருக்கு உற்பத்திக்கு பழுப்பு நிலக்கரி உபயோகத்தை பரிசோதனை செய்ய ஒரு லட்சம் டன் உற்பத்தி செய்யக்கூடிய பரீட்சார்த்த உருக்குத் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதுபற்றி சர்க்கார் பரிசீலனை செய்து வருவதாகவும், சேலம், பெல்லாரி இரும்புக் கனிகளைக் கொண்டு உருக்குத் தொழிற்சாலையை அமைக்கலாமெனும் யோசனை நெய்வேலி பழுப்பு நிலக்கரியை அதற்கு உபயோகிக்கலாமெனும் கருத்திலேயே கூறப்பட்டுள்ளதென்றும், பழுப்பு நிலக்கரியை உபயோகிக்கலாமென்பது இனிதான் ருசுவாக வேண்டும் என்றும் தெரிவித்தார்.

## இலங்கை தயாரா?

மூன்றுவது உலக யுத்தம் மூண்டால், பிரிட்டிஷாரும், அமெரிக்கரும் இலங்கை கடல், விமான தளங்களைப் பயன்படுத்துவது குறித்து இலங்கையிலிருந்து வெளியாகும் 'மார்னிங் டைம்ஸ்' இதழ் மிகக் கடுமையான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

இவ்விஷயத்தில் பொதுமக்களுடைய அபிப்பிராயம் கண்டிப்பாக உருவாக வேண்டுமென்றும், பார்மோசாவிலோ அல்லது பிற இடங்களிலோ அமெரிக்கா கடைப்பிடித்து வரும் கொள்கையானது உலக யுத்தத்தை மூட்டுவதாயிருந்தால், அணுகுண்டுகளால் இலங்கைக்கும் ஏற்படும் அபாயத்தை இலங்கை அரசாங்கம் அனுமதிக்கத் தயாராக இருக்கிறதா? என்றும் அவ்விதழ் கேட்டுள்ளது.

### பரிசீலனையிலிருக்கிறதாம்!

சென்ற ஆண்டு ஜூன் மாதத்தில் பம்பாயில் நடைபெற்ற கைத்தொழில் இலாகா செயலாளர்கள் மாநாட்டில், சிறுசிறு கைத்தொழில்கள், கைத்தொழில்களுக்கு உதவும் திட்டங்கள் ஆகியவை பரிசீலனை செய்யப்பட்டதென்றும், அம்மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகளெல்லாம் இப்போது சர்க்காரின் பரிசீலனையிலிருக்கிறது என்றும் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் பக்தவத்சலம் குறிப்பிட்டார்.

# நடுத்தெருவில் நடைபெற்ற இசைப் போட்டி!

## போலீசாரால் தடுக்க முடியவில்லை

### திருமண ஊர்வலத்தில் சோக நிகழ்ச்சி

ஆமதாபாத், பிப். 12—

இரண்டு திருமண ஊர்வலத்தின் முன்னர் 'பாண்டு' வாத்திய கோஷ்டிகள் இசை முழக்கம் செய்துகொண்டு சென்றனவாம்; நடுத்தெருவில், 'இரு கோஷ்டிகளில் யார் சிறந்தவர்கள்,' என்ற போட்டி ஏற்பட்டு விட்டதாம்.

தங்கள் திறமையை அவர்கள் உடனே காட்ட ஆரம்பித்தனர்.

இரு பிரிவினரும், திருமண ஊர்வலத்தை மறந்து தங்கள் போட்டியில் ஈடுபட்டனர். தெருவில் ஏரானமான மக்கள் இந்தப் போட்டியைக் காணவும், கேட்கவும் கூடிவிட்டனர். அதனுல் போக்குவரத்துகள் தடைபட்டன.

நேரம் சென்றுகொண்டே இருந்தது; போட்டி முடியவில்லை. திருமணக்காரர்கள் போட்டியை முடிக்குமாறு கோரினர்; பின்னர் கெஞ்சினர்; பின்னர் போலீசாரின் உதவியையும் நாடினர்; ஆனுல், இசைவாணர்கள் போட்டியை நிறுத்தவில்லை.

இறுதியில் திருமண ஊர்வலக்காரர்கள் பாண்டு இசை இல்லாவிட்டால் பரவாயில்லை என்று முடிவு செய்து, திருமணப் பந்தலை நோக்கி இசைக் கோஷ்டியினர் இன்றியே சென்று விட்டார்கள்.

திருமண ஊர்வலம் சென்ற பிறகும் இசைவாணர்களின் போட்டி நிற்கவில்லை. அவர்கள், எவரையும் லட்சியம் செய்யாமல், தொடர்ந்து நடுத்தெருவில் போட்டியை நடத்திக்கொண்டிருந்தார்களாம்! முடிவில் யார் வெற்றி பெற்றூர்கள் என்ற செய்தி கிடைக்கவில்லை.

## திருமணங்கள்

6-2-55 காலை சென்னை இராயப்பேட்டையில் தோழர் குப்புசாமி—தோழியர் நீலாவதி திருமணம், தோழர் க. அன்பழகன் தலைமையில் நடைபெற்றது. மணமக்கள் மலர் மாலைகளை மாற்றிக்கொண்டனர். பின்னர், மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் கே. ஏ. மதியழகன், முகவை ஆர். எல். பாண்டியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். பல தோழர்களால் மணமக்களுக்கு பரிசுகளும் வாழ்த்துக்களும் வழங்கப்பட்டது இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

28—1—55ல், அறந்தாங்கியில் தி.மு.கழகத் தோழர் சுப. அடைக்கலம்—தோழியர் செண்பகவல்லி அம்மையார் திருமணம், தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் முன்னிலையில் நடைபெற்றது. பண்டைய காலத் திருமணத்திற்கும் தற்கால சீர்திருத்தத் திருமணத்திற்கும் உள்ள வேற்றுமைகளை விளக்கி தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் சொற்பொழிவாற்றினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

2—2—55ல் சலகண்டபுரத்தில் தோழர் அ. சு. கந்தசாமி—தோழியர் செயம்மாள் திருத்திய திருமணம், மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் ப. கண்ணன், மு. வெ. கிருஷ்ணன், க. கு. சின்னுசாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். பல தோழர்களால் மணமக்களுக்கு வாழ்த்துக்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடையளிக்கப்பட்டது—வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

7—2—55 காலை சென்னை புலியூரில் எண். 4 இல்லத்தில், தோழர் தனபாலன் — தோழியர் பூரணி அம்மை திருமணம் தோழர் கா. அப்பாதுரை தலைமையில் நடைபெற்றது. தோழியர் அலமேலு அப்பாதுரை, வ. சங்கரநாராயணன், சா. வில்லவன், க. இளங்கீரன், ஆ. செ. துரை ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர். இத்திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது —வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

இராமநாதபுரம் மாவட்டம் திருப்பத்தூரில் 6—2—55 காலை 10½ மணிக்கு தோழர் துரைசாமி—தோழியர் திலகவதி திருமணம் கீழரதவீதியிலுள்ள மணமகன் இல்லத்தில், தோழர் முருகையா தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்கு ஏராளமான பரிசுகளும், வாழ்த்துகளும் பல தோழர்களால் வழங்கப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றேம்—நன்றி — பொறுப்பாளர்.

* * *

அம்மன்கோவில்பட்டி தோழர் இராமசாமிக்கும் தோழியர் திலகவதிக்கும் 6—2—55ல் நடந்த திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது —வரப்பெற்றேம்—நன்றி—பொறுப்பாளர்.

* * *

26—1—55ல், புதுமடம் தோழர் உ. சீ. அப்துல் ஜப்பார்—சீ. கா. அ. ஹுசைனு பீபி திருமணம் தோழர் உ. முகம்மதுதம்பி தலைமையில் நடைபெற்றது. மணமக்களுக்கு பல தோழர்களால் வாழ்த்துக்கள் அளிக்கப்பட்டது.

* * *

28—1—55ல், சின்னசேலம் தி. மு. கழகத் தோழர் சி. கந்தசாமி—தோழியர் பி. மாணிக்கம் திருமணம் தோழர் க. இராமசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. பெ. நெடுமாறன், இ. முஸ்தாபா, கலியமூர்த்தி, பஞ்சாட்சரம், முனியன், க. இராமசாமி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினர்.

# சேலத்தில் உருக்கு ஆலை நெய்வேலி நிலக்கரியைப் பொறுத்ததாம்!

### மத்திய மந்திரி குறிப்பு வைத்திருக்கிறாராம்

சேலத்தில் உருக்கு ஆலை ஒன்று நிறுவுவது பற்றி மத்திய சர்க்கார் திட்ட மந்திரி ஜி. எல். நந்தா குறிப்பு வைத்திருப்பதாகக் கூறியிருக்கிறாராம்.

எஸ். வி. ராமசாமி என்ற மக்கள் சபை உறுப்பினர், சேலத்தில் உருக்கு ஆலை நிறுவுவதுபற்றி அந்த மந்திரியிடம் எடுத்துக் கூறியிருக்கிறார்.

திட்ட மந்திரி கூறினர்:—

"வர்த்தகத் தொழில் இலாகாவின் ஆலோசனையுடன், திட்டக் குழு, இந்த விஷயத்தை கவனமாக பரிசீலித்து வருகின்றது. சென்னையில் உருக்கு ஆலை அமைப்பது, தென்னாற்காடு நெய்வேலியில் ஆரம்பமாகும் பழுப்பு நிலக்கரியை உபயோகிக்கும் திட்டத்தைப் பொறுத்ததாகும். அந்த நிலக்கரித் திட்டம் துவக்கப்படுவது பற்றி இந்தியப் பேரரசு தீவிரமாக ஆலோசித்து வருகிறது என்று திட்ட இலாகா மந்திரி சபை தெரிவித்துள்ளது."

"சென்னை மாநிலத்தில் உருக்கு ஆலை அமைக்க முடியுமா என்பது, பழுப்பு நிலக்கரித் தொழில் முழுவதும் அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர்தான் ஆராயப்படமுடியும்."

---

இந்தியாவில் உள்ள நூரோம் கனி படிவங்கள் சுமார் 20 லட்சம் டன் இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

---

1953 - 54ம் ஆண்டில், சுமார் ரூ. 201,10,000 பெறுமானமுள்ள 17,98 அந்தர் வனஸ்பதி இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகியது.

---

இந்தியாவில், 1953 — 54-ம் ஆண்டில், மொத்தம் சுமார் 3·9 - கோடி பேல் இந்தியப் பருத்தி செலவாயிற்று.

# கன்னட மக்களுக்கு அண்ணா அன்பழைப்பு

# இலட்சியம் கேட்டீர்! கொள்கை அறிந்தீர்!

## எண்ணுவீர் நன்கு அவற்றை! நண்ணுவீர் நாட்டின் நலனை!!

## எதிர்ப்புக் காட்டும் நல்லவர்களுக்கு நன்றி

எப்படி வளர்ந்தோம் எதிர்ப்புகளுக்கிடையே?

## பெங்களூர் மாநாட்டில் பொதுச்செயலாளர்

"இந்த ஊரில் இந்த மாநாடு நடைபெறக்கூடாது என எண்ணிய நல்லவர்களை நாம் மறந்துவிடக்கூடாது; அந்த நல்லவர்கள், தி. மு. கழகத்தவர் மாநாடு நடத்துவதற்கு அனுமதி தரக்கூடாது என்று. இந்த மாநில முதன் மந்திரி அனுமந்தையா அவர்களிடம் மனு சமர்ப்பித்திருக்கிறார்கள் என்ற செய்தியைப் பத்திரிகையில் பார்த்தபின்தான் நான் மாநாட்டில் கலந்துகொள்வதை உறுதி செய்தேன்;

**"தெய்வ நெறி, ஜனநாயகத்தை ஒழித்துவிட முற்பட்டு, அந்தத் தெய்வ நெறிக்காரர்கள் ஜனநாயகத்திற்காகத் தோண்டும் புதைகுழியில், ஜனநாயகத்தை அமிழ்த்திவிட அவர்களை அனுமதிக்கமாட்டோம்; நாங்கள் அந்தப் புதைகுழியில் இடம் பெறுவோமே தவிர, எங்கள் முயற்சிகளை கைவிடமாட்டோம்; இதனை, இந்த மாநாடு நடக்கக்கூடாது என்று தடுத்துவிட நினைத்தவர்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்;**

"பொதுவாகவே, மைசூர் மாநிலம் சிறந்த முற்போக்கான கருத்துக்களுக்கு இடமளித்துவரும் மாநிலம் எனப் பெயர் பெற்றது என்று கூறுவார்கள்; மைசூர் ஒரு (Modern State) முன்மாதிரியாக விளங்கக்கூடிய மாநிலம் என்பர்; அப்படி உள்ள மாநிலத்தில், அனுமந்தையா, விஸ்வேஸ்வரய்யா போன்றவர்களாலும் இன்னபிறராலும் வளர்க்கப்பட்டுள்ள கட்சிகளின் செல்வாக்கெல்லாம், தி. மு. கழகத்தினர் நடத்தும் இரண்டு நாட்கள் மாநாட்டினால் படுசூரணமாகிவிடும் என்று யாராவது நினைப்பார்களா?

'ஜனநாயகத் தத்துவப்படி, எந்தக் கருத்துக்களையும் யார் மூலமாகவும், ஆற அமரக் கேட்க மக்களுக்கு உரிமை உண்டு; அந்த உரிமையை மக்களுக்குத் தரவேண்டிய பொறுப்பு நாட்டை ஆளும் சர்க்காரைச் சார்ந்தது. அந்த வகையில் தி. மு. கழகம் தன் கருத்துக்களையும், இலட்சியத்தையும் எடுத்துக் கூறுவதற்காக மாநாடு கூட்டினால் இங்குள்ள சிலர் ஏன் அஞ்ச வேண்டும்? ஆத்திரப்பட வேண்டும்?

"தெய்வ நெறிக்காரர்கள், 'மாநாடு நடத்த அனுமதி தரக்கூடா'தென்று ஆட்சியாளர்களிடம் முறையிட்டது எதைக் காட்டுகிறது? அவர்களுடைய தெய்வ நெறியிலே அவர்களுக்கே நாணயமான நம்பிக்கை இல்லை என்பதைத்தானே?

**"மலை ஒன்றிருக்கிறது; அதன் மீது யாராவது கல்லெறிந்தால் மலை சுக்குநூறாகிவிடும் என்று யாரும் பயப்படுவதில்லையே! ஆனால், தெய்வ நெறிக்காரர்களின் நெறி, மலை போன்றிருக்கவில்லை; மலையானால், கல்லெறிவது கண்டு அஞ்சுவானேன்? அவர்களின் நெறி, வெறும் காகிதக் கோட்டையாயிருப்பதால்தான், நாம் எடுத்துக் கூறும் கருத்துக்கள் எனும் கற்களால் அந்தக் கோட்டை காற்றிலே பறந்துவிடும் என்று அவர்கள் அச்சம் கொள்கிறார்கள்;**

"அவர்கள், நாம் ஏதோ கலகம் விளைவிப்போம் என்று கருதினார்கள்போலும்; அந்த நல்ல மனிதர்கள் நம்மையும் நன்கு தெரிந்துகொள்ளாதவர்கள், மைசூரின் பண்பினையும் அறிந்துகொள்ளாதவர்கள் என்றே நான் கருதுகிறேன்;

"நாங்கள் கடவுளர்களைத் தாக்குவதாகவே வைத்துக்கொள்வோமே! இராமனை இழிவாகப் பேசுவதாகவே இருக்கட்டுமே; மைசூர் மாநில மக்கள் அதற்கேன் அஞ்ச வேண்டும்—அதுவும் அருமையான முதன் மந்திரி அவர்களுக்கு இருக்கும்போது! முதன் மந்திரியின் பெயரே அனுமந்தையா; அப்படியிருக்க, இராமனைப் பற்றி நாங்கள் ஏதாவது பேசுவது கண்டு தெய்வநெறிக்காரர்கள் கிலி கொள்வானேன்?

"நாம் என்ன பேசுவோம்—எப்படிப் பேசுவோம் என்பதை முதன் மந்திரி அவர்கள் உணர்ந்திருந்ததினால்தான் போலும், அவர், இந்த மாநாட்டினை நடத்தக்கூடாது என்று இலட்சம்பேர்வரை கையொப்பமிட்டு மனு அனுப்பியிருந்தும் கூட, ஜனநாயகத்திற்கு மதிப்பளித்ததின் மூலம் இந்த மாநாடு நடைபெறுவதற்குப் பேருதவி புரிந்திருக்கிறார்; அவருக்கும், அதிகாரிகள்—குறிப்பாகப் போலீஸ்காரர்களுக்கும், மாநாடு சிறப்பாக நடைபெறுவதற்கு மாநாட்டிற்கிருந்த எதிர்ப்பும் ஒரு காரணமென்கிற வகையில், அந்த எதிர்ப்பை உருவாக்கிய நல்லவர்களுக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

"இங்கு நடைபெறும் இந்த மாநாட்டில், 'மக்களைவிட போலீஸ்காரர்களே அதிகமிருந்தனர்,' என்று நேற்று ஒரு தின இதழ் எழுதியிருந்ததாக நண்பர்கள் கூறினர்; அப்படியே தான் வைத்துக்கொள்ளுவோமே—போலீஸ்காரர்கள் மட்டும் என்ன, அவர்களும் மக்கள்தானே? போலீசார் அதிகமாயிருக்கிறார்கள் என்றால் அந்த நிலையை நான் வரவேற்கிறேன்; எங்கள் இலட்சியத்தை, போலீசாரும், பட்டாளத்தினரும்தான் கேட்பதற்கு ஒரு சர்க்கார் அனுமதிக்காது; அதனால் போலீஸ்காரர்கள் இங்கு அதிகமாகக் கூடியிருந்தார்கள் என்றால் எங்களுக்கு இலாபம்தானே?

"இங்கே ஆயிரமாயிரமாகக் கூடியிருக்கிற நீங்களெல்லோரும், ஒன்று, போலீஸ் உடையைக் கழற்றிவிட்ட போலீஸ்காரர்களாயிருக்க வேண்டும்—அந்த பத்திரிகையின் கூற்றுப்படி; அல்லது, 'காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சளாக'த் தோன்றுவது போல, சென்ற ஒரு மாதமாக, பெங்களூரில் அதிகமாயிருந்த போலீசாரின் நடமாட்டத்தைப் பார்த்த அந்தப் பத்திரிகையின் கண்களுக்கு, உங்களை எல்லாம் போலீஸ்காரர்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது போலும்!

"தி. மு. கழகத்தின் பிரச்சினை, தேர்தல் பிரச்சினையோ' மந்திரி பதவி பெறும் பிரச்சினையோ அல்ல; மாறாக, இந்த நாட்டுக்கு விடுதலை வேண்டும் என்ற அடிப்படைப் பிரச்சினையைக் கொண்டது தி. மு. கழகம். அந்த அடிப்படை விடுதலைப் பிரச்சினை நாட்டில் உள்ள போலீசாருக்கும் பட்டாளத்திற்கும் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். அதற்கு உதவுகிற வகையில் எதிர்ப்பைக் கிளப்பி ஏராளமான போலீசாரை இங்கு அனுப்பக் காரணமாயிருந்த அந்த நல்லவர்களுக்கு மீண்டும் நன்றி கூறுகிறேன்;

"கூடியுள்ள நீங்கள், ஒன்றை மட்டும் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டும்; இங்கு, கடந்த இரு தினங்களாக, நாங்கள் கூறிய கருத்துக்களில் எது தவறு? நாங்கள் விளக்கிய கொள்கைகள், முழக்கிய இலட்சியம் எந்தக் காரணங்களால் தவறுடையன என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்;

"இன்று தமிழ் நாட்டில், தி. மு. கழகம் 1,000 கிளைகளையும் ஒரு இலட்சம் உறுப்பினர்களையும் கொண்டிருக்கிறது; இந்த உண்மையை சென்னை மாநில சர்க்கார் ஒப்புக்கொண்டிருக்கிறது; இந்த வளர்ச்சியை நாங்கள் சாதாரணமாகவா, மலர் பறிப்பது போன்று பெற்றுவிட்டோம்? இல்லையே? மலர் பறிக்கும் போதுகூட முள் குத்துகிறதே!

"எத்தனையோ கோவில்கள், திருக்குளங்கள், திருவிழாக்கள், வேத பாராயணங்கள், வேட்டுச் சத்தங்கள், காலட்சேபங்கள் இவற்றினுடையவும், அரசாங்கத்தின் அடக்குமுறைகள், எதிர்க் கட்சியினரின் ஏசல்கள் ஆகிய அத்தனை எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டுதானே வளர்ந்திருக்கிறோம்? எப்படிப் பெற முடிந்தது எங்களால்—சாதாரணமான எங்களால்—இந்த வளர்ச்சியை? எங்களுக்கென்ன, காங்கிரஸ் கட்சியின் ஆதரவும், பின்னணி பலமும் உண்டா? நாங்கள் என்ன ஞானிகளா? அல்லது, பெரிய பணக்காரர்கள், நிலப்பிரபுக்கள் என்ற 'பரம்பரைப் பெருமை படைத்தவர்களா? ஏதும் இல்லையே! பின், எப்படிப் பெற்றோம் இந்த வளர்ச்சியை? எங்களது சொந்த சாமர்த்தியத்தாலா? சொந்த சாமர்த்தியம் எங்களுக்கு இருக்கலாம்; ஆனால், அது மட்டுமா இந்த வளர்ச்சிக்குக் காரணம்?

"அடுக்குமொழி பேசுகிறார்கள்; அழகான தமிழ் நடை நடமாடுகிறது அவர்கள் பேச்சிலே; மக்கள் மயங்கிவிடுகிறார்கள்—என்று கூறுகிறார்கள்; உண்மைதான்; ஆனால், அடுக்கு மொழியாலேயே அழகு தமிழ் நடையாலேயே, மக்களை மயக்கிவிடமுடியுமா?

'பத்தித்திரு சத்தித்திரு முக்திப்பெரு' என்பதைக் காட்டிலுமா நாங்கள் சொற்களை அடுக்கிக் காட்டிவிடுகிறோம்? 'திருவாசகத்துக்கு உருகாதார்—ஒரு வாசகத்துக்கும் உருகாதார்' என்று கூறப்படுகிற அழகு நடையைவிடவா எங்கள் நடை இனிது? பின் எப்படி எங்கள் வாசகத்துக்கு உருகினார்கள் மக்கள்? இதைத்தான் கர்நாடக மக்கள் எண்ணிப் பார்த்து ஒரு நல்ல முடிவுக்கு வரவேண்டும் என்று அன்புடன் கோருகிறேன்.

**"இன்று நாங்கள் பெற்றுள்ள வளர்ச்சிக்கு, நாங்கள் கொண்டுள்ள இலட்சியத்திலே உள்ள ஜீவசக்தி, நியாயம் இவைதானே காரணமாயிருக்க முடியும்? நாங்கள் காட்டுகிற காரணங்களை மக்கள் நியாயமானவை என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே அதன் பொருள்?**

**"அதனால்தான், நியாயம் மிகுந்த 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் இலட்சியம் குறித்து கர்நாடக மக்கள் சிந்திக்க வேண்டுமென அவர்களை அன்புடன் அழைக்கிறேன்,"**

—என்று, பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள், கர்நாடக தி. மு. கழக முதலாவது மாநாடு பெங்களூரில் 13—2—55 அன்று நடைபெற்றபோது கருத்துரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

"கர்நாடகப் பகுதியில் தி. மு. கழக மாநாடுகள் இந்த இரு நாட்களாக சிறப்புற நடைபெற்றுள்ளன.

தமிழ் நாட்டில் தி. மு. கழகம் பெற்றுள்ள அளவு வளர்ச்சியை இந்தப் பகுதியில் பெற்றிருக்கவில்லை; என்றாலும், இன்று உங்களுடைய பேராதரவால் தி. மு. கழக மாநாடு இத்தனை சீரும் சிறப்புமாக நடைபெற முடிந்துள்ளது.

இந்த மாநாடுகள் நடைபெறுவதற்காக இருமுறை செய்யப்பட்ட முயற்சிகள் தடைப்பட்டன; மைசூர் மாநிலத்தில் ஏற்பட்ட சில தொழில் தகராறுகள், நமது மாநாடுகள் இருமுறை ஒத்திவைக்கப்படுவதற்குக் காரணமாயிருந்தன.

மூன்றாம்முறையாக முயற்சிக்கப்பட்டு இப்போது இம்மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாடுகளில் இந்தப் பகுதியில் வாழும் மக்கள் இவ்வளவு பெருந்திரளாகக் கூடியிருப்பர் என்று நான் எண்ணவில்லை.

முதன் முதலில் இங்கு மாநாடுகளை நடத்த வேண்டும் என்று என்னிடம் நண்பர்கள் கேட்டபோது, நான், 'இந்தப் பகுதியில் ஏராளமான கிளைக் கழகங்களை நிறுவி, ஆயிரக்கணக்கான உறுப்பினர்களைச் சேர்த்த பின்தான் மாநாடு நடத்துவது நல்லது; அப்போதுதான் நல்ல ஆதரவு கிடைக்கும்,' என்று கருத்தறிவித்தேன்; ஆனாலும், நண்பர்கள், 'இப்போதுள்ள கிளைக் கழகங்களின் ஆதரவு கொண்டே இந்த மாநாடுகளை நடத்த வேண்டும்,'' என்றனர்.

இப்போது நீங்கள் இங்கே பல்லாயிரக் கணக்கில் கூடியிருப்பதைப் பார்க்கும்போது, ஏற்கனவே உங்களுக்கு கழகத்தின் கொள்கைகளும் இலட்சியமும் ஓரளவு நன்றாகவே புரிந்திருக்கிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

(பொதுச்செயலாளர் அண்ணாதுரையின் சொற்பொழிவு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.)

## அரசியல் மாநாடு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அடுத்து, ஆவடி காங்கிரசில் நிறைவேற்றப்பட்டுள்ள 'சோஷலிசம் போன்ற சமூக அமைப்பு' என்ற தீர்மானத்தின் பித்தலாட்ட நோக்கம் குறித்து, தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள் விளக்கம் தந்து மக்களுக்கு எச்சரிக்கை தந்தார்.

அதனை வழிமொழிந்து தோழர் அன்பழகன் உரை நிகழ்த்தினார்.

அடுத்து, 'திராவிட நாடு திராவிடருக்கே' எனும் இலட்சியத்திற்கு கன்னட மக்களின் ஆதரவு கோரும் தீர்மானத்தை முன்மொழிந்து தோழர் இரா. நெடுஞ்செழியன் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதும் அதனை வழிமொழிந்து கன்னடத்தில் தோழர் மு.க.வேந்தன் பேசினார்.

பின்னர் தோழர்கள் மதியழகன், அ. பொன்னம்பலனார், காஞ்சி-பெருமாள், சென்னை வி. ராமசாமி ஆகியோரும் தீர்மானங்களை முன்மொழிந்தும் வழிமொழிந்தும் பேசினர்,

செயலாளர் ஏ. டி. பிரான்சிஸ் நன்றி நவின்றார்.

இறுதியாக, பலத்த மகிழ்ச்சி ஆரவாரப் பேரொலிக்கிடையே, பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், வரலாற்றுச் சிறப்புக்குரிய கருத்துரை அளித்தார்கள்.

## திரு - கொச்சியில் காங்கிரஸ் மந்திரி சபை

### இன்று பதவி ஏற்கும்

பட்டம் மந்திரி சபை நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மூலம் பதவியைவிட்டு அகற்றப்பட்ட பின்னர் திரு-கொச்சியில் திரு-தமிழர் காங்கிரசின் ஆதரவுடன் பனம்பள்ளி கோவிந்த மேனன் தலைமையில் காங்கிரஸ் மந்திரி சபை இன்று பதவி ஏற்கும் என்று தெரிகிறது.

காங்கிரஸ் அமைக்கும் மந்திரி சபைக்கு, 118 பேர் கொண்ட திரு-கொச்சி சட்ட சபையில், 61 பேர்களுடைய ஆதரவு கிடைக்கும் என்று தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என் அண்ணாதுரை, எம்.ஏ.